தினமணி

**மகசூலை பெருக்குவதில் மண் வளத்தின் பங்கு**

First Published : 27 Jul 2010 12:46:05 PM IST

தூத்துக்குடி, ஜூலை 26: தூத்துக்குடி அருகே கூட்டாம்புளி கிராமத்தில் மகசூலை பெருக்குவதில் மண் வளத்தின் பங்கு குறித்த விவசாயிகளுக்கான கருத்தரங்கம் நடைபெற்றது.

ஸ்பிக் உர நிறுவனம் மற்றும் இந்திய உரக் கழகம் ஆகியவை இணைந்து நடத்திய இக்கருத்தரங்கத்திற்கு சேர்வைக்காரன்மடம் விவசாயிகள் சங்கத் தலைவர் எஸ். தர்மராஜ் தலைமை வகித்தார்.

கூட்டாம்புளி விவசாயிகள் சங்கத் தலைவர் பி. பட்டுமுருகன், சேர்வைக்காரன்மடம் விவசாயிகள் சங்கச் செயலர் சி. தனுஷ்கோடி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த கருத்தரங்கில் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள 11 கிராமங்களைச் சேர்ந்த சுமார் 200 முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர். கருத்தரங்கில் கலந்து கொண்ட இந்திய உரக் கழகத்தின் சென்னை மண்டல நிர்வாகி எம். ரிமோல்ட் ஸ்பிக் நிறுவம் மூலம் மண் பரிசோதனை மற்றும் நுண்ணூட்ட உரங்கள் பரிசோதனை செய்யப்பட்ட மண்வள பாதுகாப்பு திட்ட அட்டைகளை 160 முன்னோடி விவசாயிகளுக்கு வழங்கி பேசினார்.

மண் பரிசோதனையின் முக்கியத்துவம் குறித்தும், அதன் மூலம் மகசூலை அதிகரிக்கும் உத்திகள் குறித்தும் அவர் விளக்கினார்.

ஸ்பிக் வேளாண் சேவைகள் பிரிவு துணை மேலாளர் டி.வி. டேவிட், ஸ்பிக் விற்பனை பிரிவு ஆலோசகர் எஸ். மோகனசுந்தரம், நெல்லை விற்பனை பிரிவின் துணை மேலாளர் எம். செல்வம், கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரி முதல்வர் ஏ. ராஜராஜன், தூத்துக்குடி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் வி. லூயிஸ் ராஜரத்தினம், ஸ்பிக் விற்பனைத் துறையின் முதன்மை மேலாளர் என். நாச்சியப்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர்.

விவசாயிகள் பேரூட்ட சத்துக்களை மட்டும் பயிர்களுக்கு இடாமல், மண் பரிசோதனை செய்து நுண்ணுட்டச் சத்துக்களின் அளவை அறிந்து குறை இருந்தால் அவற்றை தகுந்த பரிந்துரையுடன் நிவர்த்தி செய்ய வேண்டும். விவசாயிகள் கண்டிப்பாக மண் பரிசோதனை செய்ய வேண்டும் என கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது.

இறுதியில் ஸ்பிக் நிறுவன துணைத் தலைவர் இர. முத்துமனோகரன் பேசினார். ஸ்பிக் உரத் தொழிற்சாலை வளாகத்தில் மண் பரிசோதனை மையம் மற்றும் நுண்ணுட்ட உரங்கள்

பரிசோதனை மையம் செயல்பட்டு வருகிறது. இதனை விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

கருத்தரங்கில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு வீட்டு காய்கறி தோட்டம் அமைக்க இலவசமாக காய்கறி விதைகள் வழங்கப்பட்டன.

முன்னதாக, ஸ்பிக் நிறுவன மதுரை மண்டல முதுநிலை மேலாளர் டி.பி. சுந்தர்சிங் வரவேற்றார். ஸ்பிக் அக்ரி கிளினிக் முதுநிலை விளம்பரதாரர் சி. சின்னக்காளியப்பன் நன்றி கூறினார்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 82.07 அடி**

First Published : 27 Jul 2010 10:32:37 AM IST

சேலம், ஜூலை 26: மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 82.07 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1,932 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 1,007 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணையின் நீர் இருப்பு 44.05 டி.எம்.சி.

**ஆடிப்பட்ட காய்கறி பயிர் சாகுபடி பயிற்சி முகாம்**

First Published : 27 Jul 2010 12:23:22 PM IST

கரூர், ஜூலை 26: கரூர் மாவட்டம், தாந்தோன்றிமலை வட்டார தோட்டக்கலைத் துறை சார்பில், வெள்ளியணையில் ஆடிப்பட்ட காய்கறிப்பயிர் சாகுபடி பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

இதில், வெள்ளியணை, வெங்கடாபுரம், ஜல்லிப்பட்டி, ஓந்தாம்பட்டி, தாளியாம்பட்டி மற்றும் சுற்றுப்பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர்.

வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் லூ. சொர்ணமாணிக்கம் பயிற்சிக்கு தலைமை வகித்துப் பேசியது:

காய்கறிப்பயிர்கள் சாகுபடி செய்ய ஏற்ற பட்டம் ஆடிப்பட்டமாகும். ஆடிப்பட்டத்தில் கிடைக்கும் குறைந்த அளவிலான நீரைக் கொண்டு குறைந்த பரப்பில் காய்கறிப் பயிர்கள் சாகுபடி செய்தால் கூடுதல் மகசூலுடன் அதிக லாபமும் கிடைக்கும். காய்கறிப்பயிர் சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு வட்டாரத்திலுள்ள அனைத்து கிராமங்களிலும் காய்கறி சாகுபடி பயிற்சி முகாம் தோட்டக்கலைத் துறையினரால் நடத்தப்படுகிறது என்றார் அவர்.

இந்தப் பயிற்சி முகாமில் வட்டார வேளாண்மை துணை அலுவலர் பிச்சைமுத்து, உதவி அலுவலர்கள் பரமேஸ்வரன், சுமதி, செந்தில்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி பால்குடங்களுடன் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

First Published : 27 Jul 2010 10:49:12 AM IST

கோவை, ஜூலை 26: பால் கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி, கோவையை அடுத்த பச்சாபாளையத்தில் உள்ள ஆவின் நிறுவனம் முன்பு, பால்குடங்களுடன் விவசாயிகள் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினர். விவசாயிகள் போராட்டக் குழு சார்பில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் 15 அமைப்புகள் பங்கேற்றன.

உற்பத்திச் செலவு அடிப்படையில் விலை நிர்ணயம் செய்ய வேண்டும். கொள்முதல் விலையை பசும்பாலுக்கு ரூ. 25 எனவும், எருமைப் பாலுக்கு ரூ. 30 எனவும் உயர்த்த வேண்டும். கர்நாடகம் மற்றும் புதுச்சேரியைப் போல, பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ. 5 நேரடி மானியம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இப் போராட்டம் நடைபெற்றது.

கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கத் தலைவர் என்.எஸ்.பழனிசாமி, தமிழக விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் வழுக்குப்பாறை பாலு, ஸ்ரீதர் மூர்த்தி (பாஜக), வேலுசாமி (அதிமுக), பொன்னுசாமி (மதிமுக), தங்கவேலு (அகில இந்திய விவசாயிகள் சங்கம்), சிவசாமி (கொங்கு வேளாள கவுண்டர் பேரவை), சதாசிவ மூர்த்தி (கொங்கு இளைஞர் பேரவை), பெரியசாமி (கொமுக), வி.பி.இளங்கோவன் (தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்) உள்பட ஏராளமானோர் இதில் பங்கேற்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் மண் கலயங்களில் பாலை ஊற்றி எதிர்ப்புத் தெரிவித்தனர். போராட்டக் குழு சார்பில் தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட செயலர் கந்தசாமி கூறியது:

பால் உற்பத்திச் செலவு அதிகரித்த போதும் கொள்முதல் விலையை உயர்த்தாததால் விவசாயிகள் இத்தொழிலை விட்டுச் செல்லக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. கேரளத்தில் ஒரு லிட்டர் ரூ. 20-க்கு கொள்முதல் செய்து வாடிக்கையாளர்களுக்கு ரூ. 24-க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆனால், தமிழகத்தில் ஆவின் நிறுவனம் ரூ. 15-க்கு கொள்முதல் செய்து சில்லரையில் லிட்டர் ரூ. 23-க்கு விற்பனை செய்கிறது.

ஆகவே, உற்பத்திச் செலவு அடிப்படையில் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்ய வேண்டும். இதை அரசுக்கு வலியுறுத்தவே முதல்கட்டமாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. இன்னும் ஒரு வாரத்துக்குள் சாதகமான முடிவு அரசிடம் இருந்து வராத பட்சத்தில், போராட்டக் குழுவைக் கூட்டி அடுத்தகட்டப் போராட்டம் குறித்து அறிவிப்போம், என்றார்.

**சூரிய ஒளி மின் சக்தியில் இயங்கும் மீன் உலர்த்தும் இயந்திரம்**

First Published : 27 Jul 2010 08:55:47 AM IST

ராமேசுவரம், ஜூலை 26: ராமநாதபுரம் மாவட்டத்தில் முதன்முறையாக ராமேசுவரத்தில் ரூ. 4 லட்சம் மதிப்பில் சூரிய ஒளி மின் சக்தி மூலம் இயங்கும் மீன் உலர்த்தும் இயந்திரத்தின் செயல்பாடு திங்கள்கிழமை துவக்கி வைக்கப்பட்டது.

ராமேசுவரம் தாலுகா ஓலைக்குடா மீனவ கிராம மக்கள் பயனடையும் வகையில், மன்னார் வளைகுடா உயிர் கோளகக் காப்பக அறக்கட்டளை சார்பில் ரூ. 4 லட்சம் மதிப்பில் மீன் உலர்த்தும் சோலார் கருவி ஓலைக்குடா பல்ஸ் அறக்கட்டளைக்கு வழங்கப்பட்டது.

இந்த இயந்திரத்தின் துவக்க விழாவில், மன்னார் வளைகுடா அறக்கட்டளை இயக்குநர் அருணா பாசு சர்க்கார் தலைமை வகித்து சிறப்புரை ஆற்றினார். சோலார் இயந்திர தயாரிப்பாளர் பழனியப்பன் செயல்முறை விளக்கமளித்தார்.

விழாவில், திட்ட பல்லுயிரியல் அலுவலர் முருகன், மன்னார் வளைகுடா மண்டல அலுவலர் அமானுல்லா, ஓலைக்குடா பாதிரியார் ரவி ஏனாஸ்ட், பல்ஸ் அறக்கட்டளை இயக்குநர் ஜோசப், தங்கச்சிமடம் கிராம வள மைய அலுவலர் கெவிக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பின்னர் அருணா பாசு சர்க்கார் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மீன்களை நல்ல தண்ணீரில் சுத்தம் செய்த பின்னர் உப்பு தடவி உலரவைத்து விட்டு சிறிது நேரம் கழித்து கால்சியம் பிரோபனேட் என்ற ரசாயனத் தூளை தடவி சூரிய ஒளி மின்சாரத்தில் இயங்கும் இயந்திரத்துக்குள் மீனைகளை வரிசையாக அடுக்கி வைக்க வேண்டும். சுமார் 4 மணி நேரம் கழித்து தரமான கருவாடு கிடைக்கும். இதனை வெளிநாடு மற்றும் உள்ளூர் சந்தையில் பேக்கிங் செய்து விற்கலாம். ராமநாதபுரம் மாவட்டத்தில் முதன்முறையாக மீன் உலர்த்தும் இயந்திரம் ஓலைக்குடா கிராமத்தில் அமைக்கப்பட்டு உள்ளது. இதனை மீனவப் பெண்கள் நல்ல முறையில் பயன்படுத்தி வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றி கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

**வாணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் நவீன மயம்**

First Published : 27 Jul 2010 12:47:19 PM IST

திருவண்ணாமலை, ஜூலை 26: திருவண்ணாமலை மாவட்டத்தில் முதன்முறையாக வாணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் நவீனமயமாக்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் 156 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் இயங்கி வருகின்றன. தண்டராம்பட்டு தாலுகாவில் உள்ள வாணாபுரம் தொடக்க வேளாண்

கூட்டுறவு கடன் சங்கம் தான் முதன்முறையாக தேசியமயமாக்கப்பட்ட வங்கி போல் நவீனப்படுத்தப்பட்டுள்ளது.

குளிர்சாதன வசதியுடன் கணினிமயமாக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம் வேளாண்மை கடன், மகளிர் குழுக்களுக்கு கடன், சுழல் நிதி, விவசாய கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் என மொத்தம் ரூ.5.44 கோடிக்கு கடன் தரப்பட்டுள்ளது.

மேலும் இச்சங்கத்தில் தொடங்கப்பட்டுள்ள பொதுசேவை மையம் மூலம் பொதுமக்கள் தொலை தூரம் செல்லாமல் சிட்டா, புகைப்படம் எடுத்தல், எல்.ஐ.சி. காப்பீடு செலுத்துதல், மின்சார கட்டணம், ரயில் முன்பதிவு செய்தல் உள்ளிட்ட சேவைகள் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் வேளாண் பொறியியல் மையம் மூலமாக கீழ்கண்ட நவீன கருவிகளான பவர் டில்லர், நெல் நாற்று நடவு இயந்திரம், மினிடிராக்டர், களைஎடுக்கும் கருவி, மார்க்கர், கோணாவீடர், நெல் கதிர் அறுக்கும் இயந்திரம் உள்ளிட்டவை குறைந்த வாடகைக்கு விவசாயிகளுக்கு தரப்படுகின்றன.

அதோடு அக்ரி கிளினிக் மூலம் விவசாய விளைநிலங்களின் மண்ணின் தரத்தையும், நீர் மாதிரியையும் சோதித்து, விளைநிலத்தின் தரத்துக்கு ஏற்ப உரமிடுதல் ஆலோசனை தரப்படுகிறது.

நவீனமயமாக்கப்பட்ட வங்கிக் கிளையை உணவு அமைச்சர் எ.வ.வேலு அண்மையில் திறந்து வைத்தார். இணைப்பதிவாளர் ச.சுப்பிரமணியன், துணைப்பதிவாளர் பா.ஆறுமுகம், மைய வங்கி முதன்மை வருவாய் அலுவலர் ஆ.கணேசன், சார்பதிவாளர்கள் மு.தயாளன், கிருஷ்ணமூர்த்தி, சங்க தனி அலுவலர் ஆர்.பாலாஜி, செயலர் பெருமாள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**விவசாயிகள் இந்த மாதத்தில் சின்ன வெங்காயத்தை விதைக்கலாம்:வேளாண் வணிகஅதிகாரி அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஜூலை 28,2010,00:48 IST

விழுப்புரம்:விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் தற்போது சின்ன வெங்காயம் விதைக்குமாறு வேளாண் வணிக துணை இயக்குனர் தெரிவித்துள்ளார்.

மாவட்ட வேளாண் வணிக துணை இயக்குனர் தனபால் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பு: இந்தியாவின் முக்கிய காய்கறிப் பயிர்களில் வெங்காயமும் ஒன்றாகும். மொத்த காய்கறி

உற்பத்தியில் வெங்காயம் 10.5 சதவீதம் பங்களிக்கிறது. இந்தியாவில் 2008-09ம் ஆண்டில் 135.65 லட்சம் டன் வெங்காயம் 8.34 லட்சம் எக்டேரில் உற்பத்தி செய்யப்பட் டுள்ளது. தமிழகத்தில் 3.05 லட்சம் டன் வெங்காயம் 0.35 எக்டேரில் உற்பத்தி செய்தது. பெரம்பலூர் மாவட்டம் 24.6 சதவீதம் உற்பத்தி செய்து முன்னிலை வகிக்கிறது. அதனைத் தொடர்ந்து திருச்சி(14.2 சதவீதம்), கோயமுத்தூர்(13.7 சதவீதம்), ஈரோடு(10.8 சதவீதம்) ஆகிய மாவட்டங்கள் உள்ளது. மொத்த உற்பத்தியில் சின்ன வெங்காயம் 75 சதவீதம் ஆகும்.கடந்த மே மாதம் கிலோவிற்கு 12 ரூபாய் வரை விற்ற சின்ன வெங்காயம் ஜூன் மாதம் 16 ரூபாய் வரை விற்றது. இந்த மாதம்(ஜூலை) பயிரிட்டு அக்டோபர்- நவம்பர் மாதம் சந்தைக்கு வரும் சின்ன வெங்காயத்தின் விலையை விவசாயிகள் அறிய தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் ஏற் பாடு செய்துள்ளது.

அக்டோபர் - நவம்பர் மாதம் மழை இருந்தாலும் விழாக்கால தேவை, வெங் காய உற்பத்தியில் இரண்டாமிடம் வகிக்கும் கர்நாடக வரத்துக்கள் முடிவடைதல் மற்றும் ஏற்றுமதி தேவை போன்ற காரணத்தால் விலை அதிகரிக்கும். இதனால் இந்த மாதம் வெங்காயம் விதைக்குமாறு விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.விவசாயிகள் விதை மூலம் உற் பத்தி செய்யப்படும் வெங்கா யத்தை விதைத்ததால் பயிர் செலவு குறையும். இந்த வெங்காயம் சேமிப் பதற்கு உகந்தது கிடையாது.இவ்வாறு தனபால் தெரிவித்துள்ளார்.

**கொள்முதல் விலையை உயர்த்தகோரி ஆர்பாட்டம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 27,2010,04:31 IST

வேலூர் : தமிழக விவசாயிகள் சங்கத்தின் சார்பில் பால் கொல் முதல் விலையை உர்த்த கோரி வேலூரில், கலெக்டர் அலுவலகம் அருகே ஆர்ப்பாட்டம் நடந்தது.
லிட்டருக்கு 5 ரூபாய் நேரடி மானியம் வழங்ககோரியும், பசும்பாலுக்கு 25 ரூபாயும், எருமைபாலுக்கு 30 ரூபாயும் உயர்த்தி தரக்கோரி நடந்த ஆர்பாட்டத்தை மாவட்ட தலைவர் கண்ணையா நாயூடு தொடங்கி வைத்தார். ஆர்பாட்டத்தின் முடிவில் கலந்து கொண்டவர்கள் பால்குடங்களை உடைத்து கோஷங்களை எழுப்பினர். இறுதியில், தங்களது கோரிக்கைகள் அடங்கிய மனுவை மாவட்ட கலெக்டரிடம் வழங்கினர்.

**ஸ்ரீமத் ஆண்டவன் கல்லூரியில் மூலிகை விவசாய கருத்தரங்கம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 28,2010,03:01 IST

ஸ்ரீரங்கம்: ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் கல்லூரியில், வரும் 30ம் தேதி இலவச மூலிகை விவசாய விழிப்புணர்வு கருத்தரங்கம் நடக்கிறது.ஸ்ரீமத் ஆண்டவன் கல்லூரி இயக்குனர் பிரேமா,

செயலாளர் கஸ்தூரிரங்கன், முதல்வர் சுப்ரமணியன் வெளியிட்டசெய்திக்குறிப்பு:சித்த, ஆயுர்வேத மருத்துவ முறை இந்திய மருத்துவ அறிவியல் களஞ்சியமாக திகழ்கின்றன. நவீன மருத்துவம், சில நோய்க்கு செயற்கை மருந்து கண்டறியவில்லை. கண்டறிந்த மருந்துகளால் பக்கவிளைவு ஏற்படுகின்றன.பக்க விளைவின்றி நோய் குணப்படுத்த, உலக அளவிலான பார்வை தற்போது இந்தியாவின் மூலிகை மருந்தியலான சித்த, ஆயுர்வேத மருத்துவத்தின் பக்கம் திரும்பியுள்ளது.மூலிகை மருந்து சாகுபடியினால் விவசாயிகள் பயனடைய வேண்டும். மரபு சார்ந்த விவசாய உற்பத்தி பொருட்களோடு, மூலிகை உற்பத்தியும் செய்தால் அவர்கள் வாழ்வில் பொருளாதார மேம்பாடு அடைய முடியும்.கல்லூரியின் மூலிகை அறிவியல் துறை சார்பில், கிராமந்தோறும் விவசாயக் கருத்தரங்கு, கல்லூரியில் சிறப்பு செயல்முறை விளக்க வகுப்பு நடத்தி, மூலிகை விவசாய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.வரும் 30ம் தேதி, இலவச மூலிகை விவசாய விழிப்புணர்வுக் கருத்தரங்கம் கல்லூரி வளாகத்தில் நடக்கிறது. அதில், இன்சுலின் செடி, கதிர்ப்பச்சை போன்ற மூலிகை வளர்ப்பு, தரம், விற்பனை வாய்ப்பு பற்றிய சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்படுகிறது.செலவில்லா விவசாயம் செய்ய ஜீவாமிருதம், பீஜாம்ருதம், பஞ்சகவ்யா, ஆட்டுவூட்டம் தயாரித்தல் மற்றும் பயன்படுத்துதல் பற்றிய செயல் விளக்கம் அளிக்கப்படுகிறது.இவ்வாய்ப்பை அனைத்து விவசாயிகளும் பயன்படுத்தி பயனடைய வேண்டும். விபரங்களுக்கு 98431-92321, 99440-06301 ஆகிய மொபைல்ஃபோன் எண்களை தொடர்புக் கொள்ளலாம்.

### 3 லட்சம் கிலோ விதை நெல் இருப்பு

பதிவு செய்த நாள் : ஜூலை 28,2010,03:27 IST

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் மூன்று லட்சம் கிலோ விதை நெல் இருப்பு உள்ளது.ஈரோடு வேளாண் இணை இயக்குனர் கோபால் கூறியதாவது: ஈரோடு மாவட்டத்தில் காலிங்கராயன் மற்றும் கீழ்பவானி பாசன பகுதியில் நெல் சாகுபடி செய்ய ஏதுவாக மாவட்டத்தின் பல்வேறு வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் விவசாயிகளுக்கு தேவைப்படும் விதை நெல் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. சம்பா பருவத்துக்கு ஏற்ற ஐ.ஆர்.20, பவானி, ஆடி 39, கோ.43, கோ..46 மற்றும் வெள்ளை பொன்னி ஆகியவை உள்ளது. ஒரு கிலோவுக்கு ஐந்து ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது.ஈரோடு வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் 46 ஆயிரத்து 547 கிலோ விதை நெல் உள்ளது. மொடக்குறிச்சியில் 44 ஆயிரத்து 569, கொடுமுடியில் 51 ஆயிரத்து 679, அம்மாபேட்டையில் 15 ஆயிரத்து 600, பவானியில் 29 ஆயிரத்து 950, கோபியில் 35 ஆயிரத்து 555, டி.என்.பாளையத்தில் 13 ஆயிரத்து 519, நம்பியூரில் 10 ஆயிரம், பெருந்துறையில் 14 ஆயிரத்து 223, சென்னிமலையில் 12 ஆயிரத்து 419, சத்தியமங்கலத்தில் 12 ஆயிரத்து 228,

பவானிசாகரில் 12 ஆயிரத்து 632 கிலோ என மொத்தம் ஈரோடு மாவட்டம் முழுவதும் இரண்டு லட்சத்து 98 ஆயிரத்து 751 கிலோ விதை நெல் இருப்பு உள்ளது.

**பவானிசாகர் அணையில் மழைக்காக இன்று பூஜை**

பதிவு செய்த நாள் : ஜூலை 28,2010,03:31 IST

சத்தியமங்கலம்: மழை வேண்டி பவானிசாகர் அணையில் இன்று சிறப்பு பூஜை நடக்கிறது.நடப்பாண்டு ஜூன், ஜூலை மாதங்களில் பெய்ய வேண்டிய வழக்கமான மழை கூட பெய்யவில்லை. அணையின் நீர்ப்பிடிப்பு பகுதியான நீலகிரி மலைப்பகுதியில் மழையில்லை. பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 70 அடிக்கும் கீழ் சென்று விட்டது. இதுபோன்ற நிலை ஏற்பட்டால், அணையின் மீதுள்ள விநாயகருக்கு, அணை நீரால் அபிஷேகம் செய்து, பூஜைகள் நடத்துவது வழக்கம். சென்றாண்டு இப்பூஜை நடந்த பின்னரே, வரலாறு காணாத வகையில் அணைக்கு மிக அதிகபட்ச நீர்வரத்து ஏற்பட்டு, அணை வரலாற்றில் சாதனை நிகழ்ந்தது.நடப்பாண்டும், வருண பகவானை வேண்டி, அணையின் மேலிருக்கும் விநாயகருக்கு இன்று காலை 9 மணிக்கு சிறப்பு பூஜை நடக்கிறது. முன்னதாக, அணையில் இருந்து 108 குடம் தண்ணீர் எடுத்து வந்து, விநாயகருக்கு அபிஷேகம் நடக்கிறது. பொதுப்பணித் துறையினர் சார்பில் நடக்கும் இந்நிகழ்ச்சியில், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்கின்றனர்.

**இயற்கை விவசாய விழிப்புணர்வு முகாம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 28,2010,02:49 IST

கும்பகோணம்: கும்பகோணம் அருகே திருவிடைமருதூரில் உள்ள சிவபுராணி கிராமத்தில் இயற்கை வேளாண்மை இணையம் தமிழ்நாடு மற்றும் பாண்டி வேல்டு டிரஸ்ட் சார்பில் இயற்கை விவசாயம் குறித்த  விழிப்புணர்வு முகாம் நடந்தது.திருலோகி பஞ்சாயத்து தலைவர் ரவி தலைமை வகித்தார். முன்னாள் பஞ்சாயத்து தலைவர் புஸ்பராஜ் முன்னிலை வகித்தார். வேல்ட் டிரஸ்ட் பணியாளர் வரவேற்றார். வேல்ட் டிரஸ்ட் இயக்குநர் சரோஜினி தேவி இயற்கை விவசாயத்துக்கும் நவீன விவசாயத்துக்கும் உள்ள வித்தியாசம் குறித்து பேசியதாவது:இயற்கை விவசாயம் குறைந்த செலவில் அதிக வருமானம் தரக்கூடியது. நவீன விவசாயத்தில் அதிக அளவு, அதிக செலவில். ரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள், அதனால் நூறு ஆண்டுகள் வாழ்ந்த மனிதனின் வயது சராசரியாக 40 ஆண்டுகளாகிவிட்டது. மனித வளமும், இயற்கை வளமும் அழிய காரணமான நவீன விவசாயமுறையை விட்டு இயற்கை வேளாண்முறைக்கு திரும்புங்கள். பட்ஜெட் முறையில்

விவசாயம் செய்யுங்கள்.இவ்வாறு அவர் பேசினார்.ரெசி தொண்டு நிறுவனர் எட்வின் பேசுகையில், ""பாரம்பரிய நெல்விதை மருத்துவ குணம் உடையது, நோயற்ற வாழ்க்கை தரக்கூடியது. அதிகளவில் ரசாயண உரம் பயன்படுத்துவதால் தாய்ப்பாலில் கூட விஷம் கலந்துள்ளது. குழந்தைக்கு கண்நோய், இளம்பிள்ளைவாதம், புற்றுநோயால் பாதிக்கின்றனர். சுற்றுச்சூழலும் பாதிக்கப்படுகிறது," என்றார்.டார்கெட் நிறுவனர் சதாசிவம் பேசுகையில், ""ரசாயண உரம் பயன்படுத்துவதால் நிலவளம், நீர்வளம், காற்று ஆகியவை நச்சுத்தன்மை அடைந்து உலக அழிவுக்கு காரணமாகிறது," என்றார்.ஆர்.பி.டி., நிறுவனர் அய்யாப்பிள்ளை உட்பட விவசாயிகள் 40 பேர் பங்கேற்றனர்.

**விவசாயிகளுக்கு இடுபொருள் மானியம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 28,2010,00:21 IST

திருப்புவனம்: திருப்புவனம் விவசாய அலுவலகத்தில், விதை நெல் மற்றும் இடு பொருட் கள் மானிய விலையில் வழங்கப்படுகிறது. விவசாய உதவி இயக்குனர் கதிர்வேல் கூறியதாவது: கோ- 43, ஆடுதுறை 45, 36 மற்றும் கர்நாடகா பொன்னி விதை நெல் கிலோவிற்கு ஐந்து ரூபாய் மானியத்தில் வழங்கப்படும். கம்பு விதை கிலோவிற்கு எட்டு ரூபாய் மானியம், உளுந்து விதைக்கு 12 ரூபாய் மானியம் வழங்கப் படும். நெல் விதை சேமிப்பு கலன் 325 ரூபாய் மானியத்தில் வழங்கப்படும். கைத்தெளிப்பானுக்கு 800 ரூபாய், விசை தெளிப் பானுக்கு 2,000 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப் படும். இவற்றை வாங்கவரும் விவசாயிகள், நிலத்திற்கான சிட்டா அடங்கல், ரேஷன் கார்டுடன் வர வேண்டும் என்றார்.

**நெல் விளைச்சலை அதிகரிக்க ரூ.2.41 கோடி ஒதுக்கீடு**

பதிவு செய்த நாள் : ஜூலை 28,2010,00:20 IST

சிவகங்கை: ""தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில், நெல், பயறு வகைகள் உற் பத்தியை அதிகரிக்க, மாவட்டத்திற்கு 2.41 கோடி ரூபாயை மத்திய அரசு ஒதுக்கியுள்ளது," என, விவசாய இணை இயக்குனர் ரவிகுலசேகரபாண்டியன் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது: இத்திட்டத்தில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு விதை நெல், விவசாய இடு பொருட்களுக்கான மானியம் வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. உயர் விளைச்சல்

நெல் விதைகளுக்கு, கிலோவிற்கு ஐந்து ரூபாய் மானியம் வழங்கப்படும். தற்போது 1,645 டன் நெல் விதை இருப்பு உள்ளது. ஒட்டு நெல் விதைகளுக்கு, கிலோவிற்கு 20 ரூபாய்; செம்மை நெல், ஒட்டு நெல் சாகுபடி செயல் விளக்கம் அமைக்க, ஏக்கருக்கு 3,000; நெல் நுண்ணூட்ட உரம், வேம்பு பூச்சி மருந்துகளுக்கு ஏக்கருக்கு 200; விவசாய பம்பு செட் அமைக்க 10 ஆயிரம்; ரோட்டாவேட்டர் கலப் பைக்கு 30 ஆயிரம்; கோனோவீடர் களை எடுக்கும் கருவிக்கு 3,000; விசை உழவு இயந்திரத்திற்கு 45 ஆயிரம்;  விதைக்கும் கருவிக்கு 2,500 ரூபாய் மானியம் வழங்கப்படும். பயிற்சி வயல்வெளிகள் அமைத்து, மற்ற விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்க கிராமத்திற்கு 17 ஆயிரம் ரூபாய் வீதம் 30 கிராமங்களில் செயல் விளக்கம் அளிக்கப்படும். விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளலாம்," என்றார். விவசாய அலுவலர் நடராஜன் உடனிருந்தார்.

**செம்மை நெல் சாகுபடி இலக்கு 8,000 ஹெக்டேர்: வேளாண் கருத்தரங்கில் இணை இயக்குனர் பேச்சு**

பதிவு செய்த நாள் : ஜூலை 28,2010,02:59 IST

கரூர்: ""2010-11ல் 8,000 ஹெக்டேரில் செம்மை நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது." என்று வேளாண்மை இணை இயக்குனர் ஜெகதீசன் கூறினார்.வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை சார்பில் இரண்டு நாள் வேளாண் கருத்துக்காட்சி மற்றும் கருத்தரங்கம் கரூரில் நேற்று துவங்கியது.கரூர் கலெக்டர் உமாமகேஸ்வரி துவக்கிவைத்தார்.

வேளாண்மை இணை இயக்குனர் ஜெகதீசன் பேசியதாவது: மாவட்டத்தில் 1 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பயிர் சாகுபடி நடக்கிறது.  கடந்த ஆண்டு 16 ஆயிரம் ஹெக்டேர் நெல் சாகுபடியில், 6,000 ஹெக்டேரில் செம்மை நெல் சாகுபடி நடந்தது. கரும்பு 6,300 ஹெக்டேர், பயறு 12 ஆயிரம் ஹெக்டேர், எண்ணெய்வித்து 17 ஆயிரம் ஹெக்டேர், காய்கறி 11 ஆயிரம் ஹெக்டேர் சாகுபடி நடந்தது.குறுகிவரும் வேளாண் பரப்பையும், பெரிகிவரும் மக்கள் தொகையையும் கணக்கிட்டு உற்பத்தியை பெருக்க வேண்டியுள்ளது. உற்பத்தியை பெருக்க உயர் தொழில்நுட்பம், நீர் மேலா ண்மை கடைபிடிக்க வேண்டும். 2010-11ல் 8,000 ஹெக்டேரில் செம்மை நெல் சாகுபடி செய்யவும், ஹெக்டேருக்கு 8,500 கி÷ லா மகசூல் எடுக்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.இதற்கு, ஹெக்டேருக்கு 3.000 ரூபாய் வேளாண் இடுபொருள் அரசு மானியம் வழங்குகிறது. விதை கிராம திட்டத்தில் 50 சதவீதம் மானிய திட்டத்தில் விதை நெல் 160 மெட்ரிக் டன், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் மூலம் 200 மெட்ரிக் டன் விநியோகம் செய்யவும், கட லை, பயறு, சிறுதானியம் விநியோகம் செய்யவும் 70.4 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் 20.75 லட்சம் மானியம் வழங்கப்படுகிறது.கரும்பில் துல்லிய பண்ணை திட்டத்தில் 200 ஹெக்டேர் சொட்டு நீர் பாசனம் செய்து, ஏக்கருக்கு 125 மெட்ரிக் டன் கரும்பு உற்பத்தி செய்யப்படவுள்ளது. இதற்கு மானியம் 97.28 லட்சம் ரூபாய் கரூர் மாவட்டத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.பயறு வகை பயிர் சாகுபடி அதிகரிக்கும் வகையில் 326 ஹெ க்டேரில் 17.30 லட்சம் ரூபா ய் செலவில் விவசாயிகளுக்கு செல்விளக்கத்திடல் அமைக்க மானியம் வழங்கப்படுகிறது. தேவையான அனைத்து விதை, உரம் முன்கூட்டியே வேளாண்மை விரிவாக்க மையங்களிலும், தொ டக்க கூட்டுறவு வங்கிகளிலும் இருப்புவைக்கப்பட்டுள்ளது.இவ்வாறு அவர் பேசினார்.கூட்டுறவு இணை பதிவாளர் உமாமகேஸ்வரி, தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் கந்தசாமி, வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் தியாகராஜன், வேளாண்மை துணை இயக்குனர் சண்முகம் மற்றும் பலர் பங்கேற்றனர்.

**தக்காளி விலை திடீர் வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஜூலை 28,2010,00:47 IST

கோவை: கோவைக்கு கர்நாடக மாநிலத்தில் இருந்து தக்காளி வரத்தின் திடீர் அதிகரிப்பால், ரூ.40க்கு விற்ற ஒரு கிலோ தக்காளி நேற்று எம்.ஜி.ஆர்., மார்க் கெட்டில் 7 ரூபாய்க்கு விற்றது. கோவை மாவட்டத்தில் தக்காளி சீசன் தற்போது இல்லாத நிலையில், சுந்தராபுரம், நாச்சிபாளையம், கிணத்துக்கடவில் உள்ள மார்க்கெட்களுக்கு தக்காளி வரத்து மிகவும் குறைந்து விட்டது. 2 வாரங்களாக கடைகளில் ஒரு கிலோ தக்காளி 25 முதல் 35 ரூபாய்வரை விற்பனையானது. கோவை - மேட்டுப் பாளையம் ரோட்டில் உள்ள எம்.ஜி.ஆர்., காய்கறி மார்க்கெட்டுக்கு நேற்று திடீரென 25 லாரி லோடு தக்காளி கர்நாடகா மாநிலத்திலிருந்து வந்தது. இதனால், ரூ.30க்கு விற்ற ஒரு கிலோ தக்காளி நேற்று 7 ரூபாயாக குறைந்தது. வடமாநிலங்களில் பலத்த மழை பெய்வதால் மும்பை, புனே நகரங்களுக்கு தக்காளி அனுப்பமுடியவில்லை, என வியாபாரி கள் தெரிவித்தனர்.

**கொப்பரை கிலோ ரூ.33.40**

பதிவு செய்த நாள் : ஜூலை 28,2010,00:42 IST

பொள்ளாச்சி:நெகமத்தில் நடந்த கொப்பரை ஏலத்தில் ஒரு கிலோவுக்கு அதிகபட்சமாக 33.40 ரூபாய் விலை கிடைத்தது. நெகமம் சுற்றுப்பகுதி விவசாயிகள் 4 பேர், ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்திற்கு 15 மூட்டை கொப்பரையை கொண்டு வந்தனர். மொத்தம் இரண்டு

வியாபாரிகள் கொப்பரையை ஏலம் கூறினர். ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சண்முகம் ஏலம் நடத்தினார்.மழை காரணமாக கொப்பரை வரத்து குறைந்திருந்திருந்தால் தரம் பிரிக்கப்படாமல் ஏலம் விடப் பட்டது. கொப்பரை கிலோவுக்கு 24 ரூபாய் முதல் அதிகபட்சமாக 33.40 ரூபாய் வரை ஏலம் போனது. அதிகாரிகள் கூறுகையில், "பொள் ளாச்சி, நெகமம், கிணத்துக்கடவு சுற்றுப்பகுதியில் மழை பெய்வதால், கொப்பரை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் ஏலத்திற்கு கொப்பரை வரத்து குறைந்துள்ளது. கொப்பரை குறைந்தள வே ஏலத்திற்கு வந்திருந்தாலும், விவசாயிகள் ஏமாற்றமடையக்கூடாது என்பதால் ஏலம் நடத்தப்பட்டது. ஏலத்தில், கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது, கொப்பரை விலை கிலோவுக்கு 60 பைசா உயர்ந்துள்ளது' என்றனர்.

**சின்ன வெங்காயம் பயிரிட வேளாண் துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஜூலை 28,2010,03:10 IST

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வரும் பட்டத்தில் சின்ன வெங்காயம் பயிரிட்டு அதிக லாபம் பெறலாம்' என வேளாண் துணை இயக்குனர் (வேளாண் வணிகம்) லட்சுமி ராஜ் அறிவுறுத்தியுள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை:கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பயிரிடப்படும் முக்கிய காய்கறி பயிர்களில் சின்ன வெங்காயமும் அடங்கும். மாவட்டத்தில் 150 ஹெக்டேரில் வெங்காயம் சாகுபடி செய்ப்படுகிறது. சின்ன வெங்காயத்துக்கு உள்ளூர் மற்றும் வெளியூர் சந்தைகளில் வரும் மாதங்களில் அதிக விலை கிடைக்க வாய்ப்புள்ளது.கடந்த மே மாதத்தில் ஒரு கிலோ 12 ரூபாய் வரையிலும், ஜூன் மாதத்தில் 16 ரூபாய் வரையிலும் விற்பனை செய்யப்பட்டது. வரும் ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் நடவு பணி மேற்கொள்ள படுவதால் சின்ன வெங்காயத்தின் விலை மேலும் கூடி திருவிழா மாதங்களான அக்டோபர், நவம்பர் மாதங்களில் தேவை அதிகம் இருப்பதால் விலை வீழ்ச்சியடைய வாய்ப்பில்லை.

தமிழ்நாடு வேளாண் பல்கலை கழகம் மூலம் இயங்கி வரும் கம்ப்யூட்டர் வசதி மூலம் காய்கறி மற்றும் அனைத்து பயிர்களுக்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை ஏற்றுமதி சந்தை நிலவரங்களை அன்றாடம் தெரிந்து கொண்டு அதற்கேற்ப சந்தை நிலவரப்படி அதிக விலைக்கு விற்று விவசாயிகள் பயன் அடைய வாய்ப்புள்ளது.செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் கர்நாடகா, மஹாராஷ்டிரா மாநிலத்தில் இருந்து சின்ன வெங்காயம் வரத்துகள் வந்த போதிலும் விலையில் அதிக மாற்றம் ஏற்பட வாய்புகள் இல்லை.அக்டோபர், நவம்பர் மாதங்களில்

அறுவடை செய்யப்படும் சின்ன வெங்காயம் மேலும் அதிக விலையை எட்டிட இயலும் என்பதால் விவசாயிகள் வரும் பட்டத்தில் சின்ன வெங்காயம் அதிக பரப்பில் சாகுபடி செய்து பயன் அடையலாம். மேலும், வடகிழக்கு பருவமழை அதிகம் பெய்ய வாய்ப்புள்ளதால் சேமித்து வைக்க இயலாத நிலையில் உடன் சின்னவெங்காயத்தை சந்தைபடுத்தி விற்பனை செய்வது உகந்ததாகும்.

**திடீர் விலை சரிவால் தக்காளி சாகுபடி அழுகியது: பறிக்காமல் வயலில் வீணாகும் அவலம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 28,2010,01:07 IST

உடுமலை:உடுமலை பகுதிகளில் தக்காளி கொள்முதல் விலை திடீரென சரிந்தது. செடியிலிருந்து தக்காளி பறிக்கும் கூலி கூட கிடைக்காததால் விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனனர்.

உடுமலை பகுதிகளில் 30 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தக்காளி சாகுபடியில் விவசாயிகள் ஆண்டு முழுவதும் ஈடுபட்டு வருகின்றனர். 120 நாள் சாகுபடி காலத்தில், 90 வது நாள் முதல் தக்காளி அறுவடை செய்யப்பட்டு; ஏக்கருக்கு ஒன்றரை டன் வரை மகசூல் கிடைத்து வருகிறது. சராசரியாக ஏக்கருக்கு 12 ஆயிரம் ரூபாய் வரை சாகுபடி செலவு பிடிக்கும் தக்காளி சாகுபடியில், நிரந்தரமில்லாத விலையால் விவசாயிகள் பாதித்து வருகின்றனர். உடுமலை பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் தக்காளி, தினமும் 50க்கும் மேற்பட்ட லாரிகள் மூலம் கேரளா உட்பட அண்டை மாநிலங்களுக்கும், சென்னை, மதுரை, திருச்சி போன்ற பெரிய நகரங்களுக்கும் செல்கிறது. இதற்காக, உடுமலையில், ஐந்து தனியார் விற்பனை மையங்கள் உள்ளன. இங்கு, உற்பத்தி செய்யப்படும் தக்காளியை விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு வருகின்றனர். வெளி மாநிலங்களிலிருந்தும், வெளி மாவட்டங்களிலிருந்து தக்காளி கொள்முதலுக்கு நூற்றுக்கணக்கான வியாபாரிகள் வரும் நிலையில், தக்காளி விலை சரிந்து வருகிறது.

ஒரு மாதத்திற்கு முன்பு வரை 15 கிலோ கொண்ட ஒரு பெட்டி 400 ரூபாயும், கடந்த மாதம் முழுவதும் சராசரியாக 350 ரூபாய் வரை விற்று வந்தது. இந்நிலையில், கடந்த சில நாட்களாக தினமும் 50 ரூபாய் வரை அதிரடியாக விலை குறைந்து; நேற்று ஒரு பெட்டி 40 முதல் 50 ரூபாய் வரை மட்டுமே விற்றது.சென்னை, மதுரை, தூத்துக்குடி போன்ற பெரிய நகரங்களில் மார்க்கெட்களில் நுகர்வோருக்கு தக்காளி விலை குறையாத நிலையில், கொள்முதல் விலை திடீர் சரிவால், வயலில் உள்ள செடியிலிருந்து தக்காளி பறிக்கும் கூலி கூட கட்டுபடியாகாமல், தக்காளி வயல்களிலேயே விடப்பட்டு; வீணாகி வருகிறது.

**இது குறித்து விவசாயிகள் கூறியதாவது**: ஒரு பெட்டி தக்காளி கடந்த மாதம் முழுவதும் 350 ரூபாய் வரை விற்று வந்த நிலையில், வரத்து அதிகரிப்பு காரணம் கூறி விலை குறைக்கப்படுகிறது.கடந்தாண்டு தென்மேற்கு, வடகிழக்கு பருவ மழை ஏமாற்றிய நிலையில் , வழக்கமான தக்காளி வரத்தில் 60 சதவீதம் வரை குறைந்துள்ளது. இந்நிலையில், தட்டுப்பாடு காரணமாக விலை ஏறுவதற்கு பதில் குறைந்து வருகிறது. இதற்கு, தனியார் கொள்முதல் மையம் மற்றும் அங்கு வரும் வியாபாரிகளுக்குள் "சிண்டிகேட்' அமைத்து விலையை குறைத்து வருகின்றனர்.வழக்கமாக இந்த சீசனில் ஆந்திரா வரத்து காணப்படும். ஆனால், அங்கும் மழை காரணமாக வரத்து குறைவாகவே உள்ளது. இந்நிலையில், தக்காளி கொள்முதல் விலை மட்டும் குறைந்துள்ளது.தக்காளி சாகுபடிக்கு செலவிட்ட முதலீடு தொகை கூட கிடைக்காத நிலையில், தற்போதைய விலை நிலவரத்தில் பறிக்கும் கூலி கூட கட்டுபடியாகாது. இதனால், தக்காளி செடிகளை மீண்டும் வயலில் உழுது விட வேண்டிய அவல நிலை உள்ளது. இவ்வாறு விவசாயிகள் கூறினர்.

**தொடர்கதை**: கோவை, திருப்பூர் மாவட்டங்களில் லட்சக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் தக்காளி சாகுபடி உள்ள நிலையில், விலை குறைவால் ஆண்டு தோறும் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். இப்பகுதி விவசாயிகள் தக்காளி இருப்பு வைத்து விலை வரும் போது விற்கும் வகையில், குளிர்பதன கிடங்கு மற்றும் தக்காளி சாஸ் தயாரிப்பு தொழிற்சாலை அமைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்து வருகின்றனர். ஆனால், தமிழக அரசு கண்டு கொள்ளாததால் விவசாயிகள் பாதிக்கப்படுவது தொடர்கதையாக உள்ளது.

**கூட்டுறவு கடன் சங்கத்தில் விவசாயிகள் சந்திப்பு கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 28,2010,01:26 IST

அவிநாசி:சேவூர் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில், விவசாயிகள் மற்றும் கூட்டுறவு சங்க அதிகாரிகள் சந்திப்பு கூட்டம் நடந்தது.திருப்பூர் மண்டல இணை பதிவாளர் ராமமூர்த்தி தலைமை வகித்தார். சங்க செயலாளர் ஈஸ்வரமூர்த்தி வரவேற்றார். கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர் இந்துமதி, திருப்பூர் சரக துணை பதிவாளர் ரவீந்திரன், அவிநாசி வேளாண் அலுவலர் விவேகானந்தன் ஆகியோர், விவசாயிகள் எழுப்பிய சந்தேகங்களுக்கு பதில் அளித்தனர்.விவசாயிகள், "பயிர்களை நேரில் பார்த்து ஆய்வு செய்ய வேண்டும்; வறட்சியால் ஏற்படும் நஷ் டத்தை ஈடுசெய்யும் வகையில் கூட்டுறவு சங்கங் கள் உதவ வேண்டும்,' என்று கோரிக்கை விடுத்தனர். கூட்டுப்பொறுப்பு குழுக்கள் மூலம் வேளாண் கருவிகளை வாங்கி பயன் பெறுமாறும், சேவூர் சங்கத்தில் செயல்பட்டு வரும் "அக்ரி கிளீனிக்' மூலம் மண் பரிசோதனை செய்து, அதனடிப்படையில் உரமிடவும் அறிவுறுத்தப்பட்டது. பொது சேவை மையம், அக்ரோ

சர்வீஸ் சென்டர் ஆகிய வற்றையும் விவசாயிகள் பயன்படுத்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.சங்க தனி அலுவலர் பிரேம்நாத் நன்றி கூறினார்.

**கைமேல் காசு பெற கன்னி ஆடுகள்**

பதிவு செய்த நாள் : ஜூலை 28,2010,00:00 IST



**காணப்படும் இடங்கள்:** விருதுநகர் (சாத்தூர், வெம்பக் கோட்டை, ராஜ பாளையம்), தூத்துக்குடி (புதூர், கயத்தார், கோவில்பட்டி), திருநெல்வேலி (குருவிகுளம், சங்கரன்கோவில், வாசுதேவநல்லூர், மேலநீலிதநல்லூர்) முதலிய பகுதிகளில் அதிக அளவில் காணப்படுகிறது. தற்சமயம் பிற மாவட்டங்களிலும் இந்த கன்னி ஆடுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. அதிகமான அளவில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சங்கரன்கோவில் மற்றும் குருவிகுளத்திலும் விருதுநகர் மாவட்டத்தில் சாத்தூர், வெம்பக்கோட்டையிலும் காணப்படுகிறது.
**சந்தை நிலவரம்**: கன்னி ஆடுகளை கோவில்பட்டி அருகில் உள்ள திருவேங்கடம் என்ற கிராமத்தில் ஞாயிற்றுக்கிழமைதோறும் நடைபெறும் சந்தையில் வாங்கலாம்.
**கன்னி ஆட்டின் சிறப்பியல்புகள்:** இவை கருமை நிறத்துடனும் முகத்திலும் காதுகளிலும் வெள்ளை அல்லது பழுப்புநிற கோடுகளுடனும், மேலும் அதன் அடிவயிறு, தொடைப்பகுதி, வால்பகுதி மற்றும் கால்களில் வெள்ளை அல்லது பழுப்பு நிறமுடன் காணப்படும். கருப்பு நிறத்தில் வெள்ளைநிற கோடுகள் காணப்பட்டால் அவை "பால்கன்னி' என்றும் பழுப்பு நிற கோடுகள் காணப்பட்டால் "செங்கன்னி' என்றும் அழைக்கப்படுகிறது. மேலும் இவற்றின் காது மற்றும் நெற்றியில் கோடுகள் காணப்படுவதால் இதனை வரி ஆடுகள் என்று அழைக்கிறார்கள். மற்ற நம்நாட்டு வெள்ளாடுளைவிட அதிகமான அளவில் 2 அல்லது மூன்று குட்டிகளை ஈனும் திறன் பெற்றவை. குட்டிகளை நன்றாக பேணி பாதுகாக்கும் பண்புடையவை. உயரமாகவும்,

திடகாத்திரமாகவும், ஒரே நிறமுடன் இருப்பதும் கூட்டமாக நடக்கும்பொழுது ஒரு "ராணுவ அணிவகுப்பு' போல கண்ணை கவரும் இந்த கன்னி ஆடுகள். இது இறைச்சிக்காக வளர்க்கப்படும் ஆடு ஆகும். கிடா மற்றும் பெட்டை ஆடுகளுக்கு கொம்புகள் உண்டு. பிறந்த கிடா குட்டிகள் 2.1 கிலோவும், பெட்டை குட்டிகள் 2.05 கிலோ உடல் எடையுடன் இருக்கும். ஒரு வருட வயதில் கிடாக்கள் 21.70 கிலோவும், பெட்டை ஆடுகள் 20.90 கிலோ எடையுடன் இருக்கும். மேலும் ஒரு வருட வயதில் கிடாக்கள் 76 செ.மீ. உயரமும், பெட்டை ஆடுகள் 72 செ.மீ. உயரத்துடனும் காணப்படும். கன்னி ஆடுகள் அதிக அளவில் 2 (46.36%), 3(3.43%) மற்றும் 4(0.37%) குட்டிகளை ஈனும் திறன் பெற்றவை. கன்னி ஆட்டிலிருந்து 48 சதவீத இறைச்சியை பெறலாம்.

**கொட்டகை:** ஆட்டுக் கொட்டகையை மேட்டுப்பாங்கான இடத்திலும் காற்றோட்டமுள்ள இடத்திலும் அமைக்க வேண்டும். கொட்டகையின் தரைப்பகுதி ஈரத்தினை உறிஞ்சக் கூடியதாகவும், எளிதில் உலரும் தன்மையுடையதாகவும், பள்ளமோ அல்லது குழியோ இல்லாமல் மணல் கொண்டு நிரப்பி சமமாக வைக்க வேண்டும். மேலும் ஆடுகளுக்கு தேவையான அளவில் அதாவது குட்டி ஆடுகளுக்கு (4 முதல் 5 சதுரடி), பெட்டை ஆடுகளுக்கு (10 முதல் 15 சதுரடி), வளர்ந்த கிடாக்களுக்கு (15 முதல் 20 சதுரடி) இடவசதி அளிக்க வேண்டும்.

**ஆடுகளை தேர்வு செய்யும் முறை:** பெட்டை ஆடுகளை வாங்கும்பொழுது அவை ஒரு வருடம் நிரம்பியவைகளாக வாங்க வேண்டும். இரண்டு அல்லது மூன்று முறை குட்டிகளை ஈனும் ஆடுகளாக பார்த்து வாங்க வேண்டும். நல்ல வளமான, நோயற்ற ஆடுகளாக பார்த்து வாங்க வேண்டும். கிடா ஆடுகளை வாங்கும் பொழுது அவை நல்ல திடகாத்திரமான நல்ல வளமான விதைகள் உள்ள ஆடுகளாக வாங்க வேண்டும். குட்டி ஆடுகளாக வாங்குவது என்றால் மூன்று மாதமான குட்டிகளை வாங்கி வளர்க்கலாம்.

**இனப்பெருக்கம்:** ஆடுகள் 21 நாட்களுக்கு ஒரு முறை சினைக்கு வரும். சினைக்கு வரும் ஆடுகள் வாலை ஆட்டிக்கொண்டும், கத்திக்கொண்டும், பிறப்புறுப்பு வீங்கியும் காணப்படும். அந்த சமயத்தில் பெட்டை ஆடுகளுடன் கிடாக்களை சேர்க்கலாம். 20 பெட்டை ஆடுகளுக்கு ஒரு கிடாவை கண்டிப்பாக பண்ணையில் வைக்க வேண்டும். பெட்டை ஆடுகளின் சினைக்காலம் 150 நாட்களாகும். வெள்ளாடுகள் 8 மாதத்திற்கு ஒரு முறை குட்டிகளை ஈனும். அதாவது 2 வருடத்தில் 3 குட்டிகளை ஈனும்.

**தொடர்புக்கு**: சி.சவுந்தரராஜன், இணைபேராசிரியர், சென்னை-7. 94422 72383.-
கே.சத்தியபிரபா,97501 20222, 94865 85997.

**கால்நடைகளுக்கு தடுப்பூசி**

பதிவு செய்த நாள் : ஜூலை 28,2010,00:00 IST



மாடுகளுக்கு சில நோய்கள் வந்தால் அந்நோய்களிலிருந்து மாடுகளை காப்பாற்றுவதே கடினமான காரியமாகும். இத்தகைய கொடிய நோய்களை வரும் முன்னரே தடுக்க வேண்டும். தடுப்பூசி முறைகளின் மூலம் இத்தனைய கொடிய நோய்களிலிருந்து மாடுகளை நாம் காப்பாற்றலாம். கால்நடைகளுக்கு தகுந்த வயதிலும், நோய் வரும் காலத்திற்கு முன்னரும் தடுப்பூசி போடவேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் நோய் தாக்கப்பட்ட மாடுகளுக்கு அந்நோய்க்கான தடுப்பூசியை போடக்கூடாது. அந்தந்த ஊர்களில் ஏற்படக்கூடிய நோய்களுக்கான தடுப்பூசிகளை மாடுகளுக்கு போட்டுக்கொள்ள வேண்டும்.

மாடுகளுக்கான தடுப்பூசிகள்

தடுப்பூசி

வயது நோய்க்கான தடுப்பூசி பரிந்துரைக்கப்படும்

காலங்கள்

1. 4வது மாதம் கோமாரி நோய் *முதல் முறை

(வாய் மற்றும் கால் புண்) (ஆகஸ்ட் -டிசம்பர்,

ஜனவரி-பிப்ரவரி)

2. 4 வாரம் கழித்து கோமாரி நோய் * இரண்டாவது முறை

பொதுவாக கோமாரி (ஆகஸ்ட்-டிசம்பர்,

நோய்க்கான தடுப்பூசி ஜனவரி-பிப்ரவரி)

வருடத்திற்கு இரண்டுமுறையும்,

இந்நோய் அதிகமாக பாதிக்கப்பட்ட

இடங்களில் மூன்று முறையும்

போட்டுக்கொள்ள வேண்டும்.

3. 6வது மாதம் * அடைப்பான் தடுப்பூசி ஆகஸ்ட் - டிசம்பர்

(ஆன்தராஸ்)

* சப்பை நோய் தடுப்பூசி ஏப்ரல் - ஆகஸ்ட்

4. 6 மாதம் கழித்து தொண்டை அடைப்பான் தடுப்பூசி ஏப்ரல் - செப்டம்பர்

5. வருடத்திற்கு சப்பை நோய், தொண்டை

ஒரு முறை அடைப்பான், கோமாரி நோய்

தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும்.

டாக்டர் த.முத்துராமலிங்கம், டாக்டர் த.பிரகாஷ்,

கால்நடை பராமரிப்பு பிரிவு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை

மற்றும் டாக்டர் க.மீனாட்சிசுந்தரம், வேளாண் அறிவியல் நிலையம், குன்றக்குடி.

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : ஜூலை 28,2010,00:00 IST



**கோகம்**: மர வாசனைப்பயிர் - தமிழகத்திற்கு அறிமுகம் இல்லாத ஒரு பயிர். சமையலில் புளி மற்றும் தக்காளிக்கு இணையாக பயன்படுத்தலாம். கர்நாடகா, மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளிலும், மகாராஷ்டிராவிலும் பிரபலமானது. கோகம் பழத்தை நேரடியாகச் சாப்பிட இயலாது. இதன் சாறு கர்நாடகத்தில் விருந்தினர்களைக் கவுரவிக்கும் ஓர் இனிய உபசரிப்பு

அம்சமாகும். இதன் வெளித்தோலைப் பயன்படுத்தி ரசம், ஜாம், சாறு தயாரிக்கலாம். இதில் சிட்ரஸ் அடங்கியுள்ளதால் பித்தத்திற்கு சிறந்த மருந்தாக பயன்படுகிறது.
மகாராஷ்டிராவில் ரத்னகிரி மாவட்டத்திலுள்ள மலைப்பகுதிகளிலும் கேரளத்தில் காசர்கோடு மற்றும் வயநாடு பகுதிகளில் அதிகமாகவும் மேற்கு வங்கம், அசாம் பகுதிகளில் ஓரளவிற்கும் பயிராகிறது. தாவரவியல் பெயர் கார்சினியா இண்டிகா. இது விதைகளால் பெருக்கம் அடைகிறது. சுமார் 3-4 மாதம் வயதான நாற்றுகளை தோட்டங்களில் நடலாம். கடல்மட்டத்திலிருந்து 500 மீட்டர் உயரத்திற்கு குறையாத இடங்களில் இது நன்கு வளரும். தென்னையுடன் கோகத்தை ஊடுபயிராக பயிரிடலாம். காப்பி தோட்டங்களில் கோகத்தின் டிர்கா ரகம் நல்ல நிழல் தரும் ஊடுபயிராக அமையும். ஒட்டுக்கட்டப்பட்ட நாற்று 3 ஆண்டுகளில் காய்க்கத் தொடங்கும். நிரந்தரமான விளைச்சலுக்கு 12 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும். இதன் ஒட்டுக்கட்டப்பட்ட நாற்றுகள் கோகம் கிருஷி வித்யாபீடா, டாபோலியா அல்லது வெங்குர்லா புரூட் ரிசர்ச் சென்டர் ஆகிய இடங்களில் கிடைக்கிறது. (தகவல்: ரமா ஸ்ரீகன்டா, ஸ்பைஸ் இந்தியா, ஜூன் 2010)-**டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 28,2010,00:00 IST

மலச்சிக்கல்- எரு கட்டிக்கொள்ளுதல்: குறைந்த அளவு தண்ணீர், தீவனத்தில் அதிக அளவு மாவுப்பொருள் ஆகியவற்றால் மலச்சிக்கல் ஏற்படுகிறது. யானை நெருஞ்சிச்செடி இரண்டை உரலில் இடித்து 3 வேளை கொடுக்க வேண்டும் அல்லது ஓமத்தண்ணீர் 100 மிலி அளவில் 3 வேளை கொடுக்கவும். மாடுகள் பசுந்தீவனம் மற்ற உணவுப் பொருட்களை அவசர அவசரமாக விழுங்கிவிட்டு பின்பு அமைதியாகப் படுத்துக்கொண்டு மேய்ந்த இரையை மீண்டும் வாய்க்கு கொண்டுவந்து அசைபோட்டு அரைத்து விழுங்கும். ஆனால் தண்ணீர், பழைய கஞ்சி போன்ற திரவ நிலையிலுள்ள பொருட்களை மீண்டும் வாய்க்கு கொண்டுவர முடியாததால் வயிறு உப்புசம் ஏற்பட்டு மலச்சிக்கல் ஏற்படுகிறது.
வீடுகளில் நடக்கும் விழா நிகழ்ச்சிகளில் மீதம் இருக்கும் சோறு, பழைய கஞ்சி, பலகார மாவுகளை வீட்டுத் தொட்டிகளில் போடக்கூடாது. அவ்வாறு போடும் உணவுகளை மாடு உண்டால் ஜீரணம் ஆகாமல் மாடு வயிறு ஊதி மூச்சுத்திணறல் மற்றும் வயிறு உப்புசம் ஏற்பட்டு உயிருக்கு ஆபத்தான சூழ்நிலை ஏற்படும். இச்சூழ்நிலை ஏற்படாதவாறு விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் கவனமாக இருக்க வேண்டும். அப்படி ஏற்பட்டுவிட்டால் (1) ஒரு டம்ளர் வெந்நீரில் ஒரு ஸ்பூன் சமையல் சோடாவைக் கலந்து இரண்டு வேளை கொடுக்க வேண்டும். (2) ஒரு கிராம் பெருங்காயத்தை நல்லெண்ணையில் பொரித்து வாழைப்பழத்திற்குள் வைத்து 2 வேளை

மாட்டிற்கு கொடுக்க வேண்டும்.

**வயிறு உப்புசம்**: இஞ்சி-100 கிராம், எள்-10 கிராம், மிளகு-15, மஞ்சள்தூள்-5 கிராம் எடுத்துக்கொண்டு இஞ்சியின் மேல் தோலை நீக்கி, சிறிய வில்லைகளாக நறுக்கி, இஞ்சி, எள், மிளகு, மஞ்சள்தூள் இவற்றை நன்றாக அரைத்து கலந்துகொண்டு, பின் முருங்கை இலை 4 கைப்பிடி அளவு, கருப்பட்டி-200 கிராம் இவற்றை நன்றாக அரைத்து ஏற்கனவே அரைத்த வைத்துள்ள கலவையுடன் நன்கு கலந்து உருண்டையாக உருட்டி வைத்துக்கொள்ள வேண்டும். இவ்வுருண்டையைக் கல் உப்பில் தொட்டு கொஞ்சம் கொஞ்சமாக மாட்டிற்கு உள்ளே கொடுக்க வேண்டும். மருந்து கொடுத்த அரை மணி நேரம் சென்ற பின் தண்ணீர் காண்பிக்க வேண்டும்.

**மலச்சிக்கல்**: மாடுகளுக்கு ஏற்படும் மலச்சிக்கல் நீங்க ஒரு லிட்டர் தண்ணீரில் கால் கிலோ உப்பு, 200 கிராம் சுக்குப்பொடி, 20 கிராம் மிளகு பொடி கலந்து கொடுக்க வேண்டும்.

**மஞ்சள் காமாலை:** கீழாநெல்லி, தும்பை இலை, கரிசலாங்கண்ணி இலை, கண்ணுப்பூலைகள் ஒவ்வொன்றிலும் ஒரு கைப்பிடி அளவு பறித்து நன்றாக அரைத்து நீராகாரத்துடன் கலந்து காலை, மாலை ஐந்து நாட்களுக்கு கொடுத்துவர வேண்டும். (**தகவல்:** பி.ஆர்.வி.வரதராஜன், ராமச்சந்திர பிரசாத் சாலை, பாகனேரி-630 558, சிவகங்கை மாவட்டம்).

## *மூவாற்றுப்புழா அருகே ரூ.1¾ கோடி செலவில் நீர்பாசன திட்ட தொடக்க விழா நீர்பாசனத்துறை மந்திரி என்.கே.பிரேமசந்திரன் பங்கேற்பு*

*பெரும்பாவூர்,*
*ஜூலை.28–*
*மூவாற்றுப்புழா அருகே ரூ.1¾ கோடி செலவில் புதிய நீர்பாசன திட்ட தொடக்க விழா நடந்தது. விழாவை நீர்பாசனத்துறை மந்திரி என்.கே.பிரேமசந்திரன் தொடங்கி வைத்தார்.*

*ரூ.1¾ கோடி செலவில்*

*எர்ணாகுளம் மாவட்டம், மூவாற்றுப்புழா அருகே பெரியஞாழா பஞ்சாயத்தில் ரூ.1 கோடியே 70 லட்சம் செலவில் சிறிய நீர்பாசன திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதற்காக மூவாற்றுப்புழா ஆற்றில் இருந்து கிளை வாய்க்கால் வெட்டப்பட்டது. இந்த வாய்க்கால் 3100 மீட்டர் நீளம் கொண்டது. இதன் மூலம் 92 ஹெக்டர் நிலப்பரப்பு பாசன வசதி பெறும்.*

*இந்த திட்ட தொடக்க விழா நடந்தது. விழாவுக்கு பாபுபோல் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். விழாவை நீர்பாசனத்துறை மந்திரி என்.கே.பிரேமசந்திரன் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசியதாவது:–*

*6 சிறிய நீர்பாசன திட்டங்கள்*

இந்த நீர்பாசன திட்டம் 8 ஆண்டுகளாக முடக்கப்பட்டு கிடந்தது. இப்போது தான் செயல்படுத்த முடிந்தது. இந்த திட்டத்தால் பெருஞாழா பஞ்சாயத்துக்கு உட்பட்ட 6 ஆயிரம் குடும்பத்தினர் தண்ணீர் வசதி பெறுவார்கள். 92 ஹெக்டர் விவசாயிகள் பயன் அடைவார்கள்.

இது போன்று மாநிலத்தில் இன்னும் 6 இடங்களில் சிறிய நீர்பாசன திட்டத்தை செயல்படுத்த உள்ளோம். இதன் மூலம் விவசாய பயிர்களை அதிக அளவில் உற்பத்தி செய்ய முடியும் என்று நம்புகின்றோம்.

இந்த திட்டங்கள் தாமதம் ஆவதற்கு சில இடங்களில் பொதுமக்கள் நிலத்தை அரசுக்கு ஒப்படைப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. அது தான் காரணம். அடுத்த 2011–ம் ஆண்டு டிசம்பர் மாதத்துக்குள் இந்த 6 சிறிய நீர்பாசன திட்டங்களும் நிறைவேற்றப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் பி.டி.தாமஸ் எம்.பி., பெருஞாலா பஞ்சாயத்து தலைவர் வல்லமற்றம்குஞ்சு, சூப்பிரண்டு என்ஜினீயர் பாலன், குரியோகோசு உள்பட திரளான உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

## 2010–11–ஆம் பருவத்தில் கரும்பு உற்பத்தி 18 சதவீதம் உயரும்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

வரும் 2010–11–ஆம் சர்க்கரை பருவத்தில், கரும்பு உற்பத்தி, அதற்கு முந்தைய பருவத்தைக் காட்டிலும் 18 சதவீதம் அதிகரித்து 37 கோடி டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நடப்பு 2009–10–ஆம் பருவத்தில் இது 31.30 கோடி டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சர்க்கரை பருவம் என்பது, அக்டோபர் மாதத்தில் தொடங்கி, செப்டம்பர் மாதத்தில் நிறைவடையும்.

இதே ஆண்டுகளில் கரும்பு பயிரிடப்படும் பரப்பளவும் 44.50 லட்சம் ஹெக்டேரிலிருந்து 19 சதவீதம் அதிகரித்து 52.80 லட்சம் ஹெக்டேராக அதிகரிக்கும் என இந்திய சர்க்கரை

*ஆலைகள் சங்கம் மதிப்பீடு செய்துள்ளது.*

*வரும் பருவத்தில் உற்பத்தியாக உள்ள 37 கோடி டன் கரும்பில், 25 கோடி டன் கரும்பு, சர்க்கரை உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகிறது. ஒரு டன் கரும்பிலிருந்து கிடைக்கும் சர்க்கரையின் அளவு 10.2 சதவீதமாகும். ஆக, வரும் பருவத்தில் 2.55 கோடி டன் சர்க்கரை உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. நம் நாட்டில், ஓர் ஆண்டிற்கு தேவைப்படும் சர்க்கரையின் அளவு 2.30 கோடி டன் ஆகும். ஆக, வரும் பருவத்தில் தேவைப்பாட்டைக் காட்டிலும் சர்க்கரை அதிக அளவில் உற்பத்தியாகும் நிலை உருவாகியுள்ளது.*

# பசுமை போர்வைக்குள் சிறுவாணி



கோவை நகர மக்களுக்கு இயற்கையின் கொடையாக விளங்கும் சிறுவாணி அணைக்கு, முத்திகுளம் தீர்த்த அருவியில் இருந்துதான் பெருமளவில் தண்ணீர் வருகிறது. இயற்கையின் தாலாட்டில் பசுமை போர்வை சூழ்ந்த முத்தி குளம் தீர்த்த அருவியில் இருந்து தண்ணீர் வரும் அழகிய காட்சியை படத்தில் காணலாம்.